# ஆசை

ஊரில் பட்டதோ
பல கஷ்டங்கள்!
பசியால் தவித்ததோ
பல நாட்கள்!
உச்சிமீது குண்டு வந்து
வீழந்தபோதிலும்;
தாய் மண்ணை' விட்டுப்பிரியேன்
என வாழ்ந்தவன அவன்
வைரக்கியத்துடன்.
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு கலாச்சாரம்
அவனது குறிக்கோளாயிற்று

காலத்தின் போக்கில்
மனம்மாறி
புலம் பெயர்ந்து
லண்டன் சென்ற அவன்
புது உலகைக் கண்டு மயங்கினான்

பென்ஸ் கார்கள்,. மாடி வீடுகள்,
கைநிறைய காசு,
கழுத்தில் தங்கச் சங்கிலி
காதில் தோடு
கையில் செல்போன்
அதைக் கண்டு மனம்பேதலித்து
அதைத் தேட அவன் வழி தேடினான்.

கடுமையான உழைப்பின்றி
அதனைப் பெற வழி
போலி கிரெடிட் கார்ட்தான்
குறுக்கு வழி !
ஆனால் அதன் முடிவால்
தன் மானம் போகும் ஒரு நாள்
சிறைக்குப் போகும் வழி
என்பதையும் அவன் அறிவான்.
ஆசை யாரைத்தான் விட்டது?